## வடகிழக்குப் பருவ மழையை முன்னிட்டு அடையாறு —

# வேளச்சேரி - சோழிங்கநல்லூர் - ஆதம்பாக்கம் பகுதிகளில் முன்னேற்பாட்டுப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

சென்னை, அக். 22-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2025) வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, தயார் நிலையில் உள்ள நிவாரண மையங்கள், உணவு தயாரிக்கும் கூடங்கள், உணவுக் கூடங்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள், சீரமைக்கப்பட்டுள்ள வெள்ளநீர் கடத்தி கால்வாய்கள் மற்றும் ஆகாயத் தாமரை அகற்றும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அடையாறு காமராஜ் அவன்யூ முதல் தெரு சென்னை ஆரம்பப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையல் கூடத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தார்.

வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, வேளச்சேரி பறக்கும் ரயில் திட்ட சாலைப் பகுதியில் கால்வாய் தூர்வாரப்பட்டுள்ளதால் அப்பகுதி பாலத்தின் 6 கண்கள் வழியே நீர் தடையின்றி செல்வதையும் துணை முதலமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சென்னை சோழிங்கநல்லூர் நாராயணபுரம் ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை 44.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 கண் நீர் ஒழுங்கியுடன் 850 மீ. நீளத்தில் 1,100 கன.அடி வெள்ள நீர் கடத்தும் திறனுடைய இரண்டு கண் கொண்ட கூடுதல் பெரு மூடு வடிகால்வாய் அமைக்கப்பட்டதால் நீர் தடையின்றி செல்வதை துணை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சோழிங்கநல்லூர் பகுதியில் கீழ்கட்டளை உபரி நீர் கால்வாயில் ராட்சத இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தென் சென்னையில் ஆதம்பாக்கம் பகுதியில் தேங்கும் மழை நீரை வேளச்சேரி வழியாக பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதிக்கு கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் வீராங்கல் ஓடையில், ரூ.5.60 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகள், ஓடையின் கரையோரங்களில் 1 மீட்டர் உயரத்திற்கு அமைக்கப்பட்டுள்ள தடுப்புச்சுவர், ஓடைக்குள் குப்பைகள் தேங்காமல் இருக்க, தடுப்பு சுவருக்கு மேல் 1.60 மீட்டர் அளவுக்கு கம்பி வலை (Chain Link Mesh) அமைக்கப்பட்டுள்ளதையும் துணை முதலமைச்சர் அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் ஆதம்பாக்கம் கக்கன் பாலம் அருகே வெள்ளநீரை வெளியேற்ற 100 ஹெச்.பி திறனுடைய மேட்டார் பம்ப் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ராஜலட்சுமி நகர் பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை மேல்நிலைப் பள்ளியில் தற்காலிக நிவாரண மையத்திற்கான வசதிகள் குறித்து துணை முதலமைச்சர் அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நீர்வளத் துறைச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், உள்பட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 244 வது நாள்!

## அம்பத்தூர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!





சென்னை, அக்.22-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 244 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (21.10.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 90, 606 அரசு குடியிருப்பு அருகில், 2) வட்டம் 93, பாரிசாலை, புகழேந்தி சாலை சந்திப்பு, முகப்பேர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/ வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர். டீக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# தீ விபத்து வார்டில் மருத்துவப் பயனாளிகளிடம் நலம் விசாரிப்பு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிகிச்சை முறை குறித்து கேட்டறிந்தார்!

சென்னை, அக். 22 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீ விபத்து வார்டில் பணிபுரிந்து வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களுடன் தேநீர் அருந்தி அவர்களுக்கு இனிப்புகள் வழங்கி கலந்துரையாடினார்.

தீபாவளி பண்டிகை பட்டாசு விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மருத்துவப் பயனாளிகளை நேரில் சந்தித்து நலம் விசாரித்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (20.10.2025) சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், தீபாவளி பண்டிகை பட்டாசு விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மருத்துவ பயனாளிகளை நேரில் சந்தித்து நலம் விசாரித்து, தீ விபத்து சிகிச்சை வார்டுகளில் பணி புரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களுடன் தேநீர் அருந்தி, இனிப்புகள் வழங்கி கலந்துரையாடினார். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**தீ விபத்து சிகிச்சை வார்டு ஆய்வு**

இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி அன்று கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வருகை புரிந்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களுடன் கலந்துரையாடி, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் சொல்லி, அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்து செல்வது என்பது தொடர் வாடிக்கையாக இருந்து வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வருகை புரிந்து இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்து இருக்கிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் ஒவ்வொரு தீபாவளி முன்பாகவும் பாதுகாப்பற்ற முறைகளில் பட்டாசு வெடிப்பதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வும், எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் அரசின் பல்வேறு துறைகளின் எடுத்துரைக்க வேண்டும் என்றும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

அந்தவகையில் ஒவ்வொரு ஆண்டும் காவல் துறை, தீயணைப்புத்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் போன்ற பல்வேறு துறைகள் இதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றன. மக்கள் நல்வாழ்வுத்துறையைப் பொறுத்த வரை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், வட்டார அரசு மருத்துவமனைகளிலும் தீபாவளிக்கென்று சிறப்பு சிகிச்சை வார்டுகள் அனைத்து மருத்துவமனைகளிலும் தொடங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் 36 இல் தலா 20 படுக்கைகள் வீதம் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கான தீக்காய பிரிவு வார்டுகள் தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில் கடந்த வாரம் இம்மருத்துவமனையில் 20 படுக்கை வசதிகளுடன் கூடிய வெண்டிலேட்டர் கருவியுடன் கூடிய வார்டுகள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று தனித்தனி வார்டுகள் தொடங்கப்பட்டது.

நேற்று முதல் தீபாவளி பண்டிகை கொண்டாட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் தொடங்கி பட்டாசு வெடித்ததினால் தமிழ்நாடு முழுவதும் சிகிச்சைக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 89 பேர், இதில் 41 பேர் சிகிச்சை பெற்று நலமுடன் இல்லம் திரும்பி இருக்கிறார்கள். 48 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த 48 பேரில் சிறிய அளவிலான அறுவை சிகிச்சை என்கின்ற வகையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் 8 பேர், மிகச் சிறிய அளவில் அறுவை சிகிச்சை என்கின்ற வகையில் 32 பேர், அந்த வகையில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 6 குழந்தைகள் பாதிக்கப்பட்டு ஒரு மகளிர் சகோதரி ஒருவர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த 7 பேரில் ஒரு குழந்தைக்கு மட்டும் 7% அளவிற்கு தீக்காய பாதிப்பும், ஒரு குழந்தைக்கு 15% தீக்காய பாதிப்பும் ஏற்பட்டிருக்கிறது. யாருக்கும் உயிர் பாதிப்பு என்கின்ற அளவில் பிரச்சினை இல்லை. மிகப் பெரிய அளவில் காயங்கள் இல்லாமல் தீபாவளி கடந்துக் கொண்டிருக்கிறது. இன்னமும் மீதமுள்ள நேரம் கடந்துக் கொண்டிருக்கிறது.

இன்னமும் பாதுகாப்பான தீபாவளி மக்கள் கொண்டாட வேண்டும் என்கின்ற வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையிலும், தீபாவளி நாளில் தங்களுடைய குடும்பத்தை விட்டு, அரசு மருத்துவமனைகளில் குறிப்பாக தீக்காய சிகிச்சை வார்டுகளில் பணியாற்றுகின்ற மகத்தான மருத்துவச் சேவை ஆற்றுகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களை பாராட்டுகின்ற வகையில் ஒவ்வொரு ஆண்டும் நான் நேரில் சென்று அவர்களுடன் தேநீர் அருந்தி அவர்களுக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகிறோம். அந்த வகையில் இந்த நிகழ்ச்சி இன்றைக்கு நடைபெற்று வருகிறது.

மருத்துவர்களும் தீக்காய சிகிச்சைகளுக்காக வரும் பொதுமக்களுக்கு சிகிச்சைகள் நல்ல முறையில் வழங்கி வருகிறார்கள். மேலும் குழந்தைகள் பட்டாசு வெடிக்கும்போது பெரியவர்களுடன் இருந்து வெடிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறோம். பருத்தி ஆடைகளை அணிந்து பட்டாசு வெடிப்பதுதான் பாதுகாப்பானது, நைலன் போன்ற ஆடைகளை அணிந்து பட்டாசு வெடித்தால் தீப்பட்டவுடன் விரைந்து ஆடைகள் பற்றிக் கொள்ளும் என்பதால் அந்த ஆடைகளை தவிர்க்க வேண்டும், பட்டாசு வெடிக்கும்போது செருப்புகள் அணிய வேண்டும், பட்டாசு வெடிக்கும் போது அருகில் ஒரு வாளியில் தண்ணீர் வைத்திருக்க வேண்டும், காற்றோட்டமான பகுதிகளில் பட்டாசு வெடிப்பது நல்லது, இடைவெளி விட்டு பட்டாசு வெடிக்க வேண்டும், ராக்கெட் போன்ற பட்டாசுகளை வெடிக்கும்போது சாய்வு நிலையில் வெடிக்க கூடாது, நேர்நிலைகளில் வைத்துதான் வெடிக்க வேண்டும் என்று இப்படி ஒவ்வொரு தீபாவளி நாளிலும் பட்டாசு வெடிப்பதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றும் மிகப் பெரிய அளவில் பாதிப்புகள் இல்லாத வகையில் தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட வேண்டும் என்கின்ற வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

**வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான கேள்விக்கு**

ஏற்கெனவே கடந்த வாரம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகர்ப்புற வளர்ச்சித்துறை போன்ற சேவை துறைகளுடன் மாநில, மாவட்ட அளவிலான அலுவலர்கள், 10க்கும் மேற்பட்ட துறை செயலாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து விளக்கங்கள் எடுத்து கூறி ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தமாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த சேவைத் துறை அலுவலர்கள் கூட்டங்கள் நடத்தி பாதுகாப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

அனைத்து அரசு மருத்துவக்கல்லூரிகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் கடந்த காலங்களில் எங்கெயெல்லாம் மழை பாதிப்புகள் உள்ளாக்கியதோ அந்த பகுதிகளில் தற்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் கடந்த 3 ஆண்டுகளாக மழைநீர் தேங்குவது என்பது இருந்தது. அதற்கு காரணம் அப்பகுதியில் மெட்ரோ பணிகள் நடைபெறுவதால் அங்கு ஏற்கெனவே இருந்த மழைநீர் வடிகால் வாரிய பணிகள் துண்டிக்கப் பட்ட நிலையில் அப்பகுதியில் மழைநீர் புகுவது என்பது இருந்தது, தற்போது அப்பணிகள் சரி செய்யப்பட்டு விட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த கனமழை காரணமாக தூத்துக்குடி அரசு மருத்துவமனை, ஏரல் போன்ற அரசு மருத்துவமனைகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளானது. அந்தவகையில் இந்த ஆண்டும் தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழை பெய்து வருகிறது. இதனால் ஏற்பட்டுள்ள சிறிய பாதிப்பும் போக்கப்பட்டிருக்கிறது. தற்போது மருத்துவமனைகளில் எங்கேயெல்லாம் மழைநீர் தேங்கியதோ அங்கேயெல்லாம் மாவட்ட ஆட்சி நிர்வாகமும், பொதுப்பணித் துறை நிர்வாகமும் அந்த பாதிப்புகளை சரி செய்து வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.எம். கவிதா, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. பாஸ்கரன், நிலைய மருத்துவ அலுவலர் மரு.வாணி, தீக்காய மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை துறைத்தலைவர் மரு.மகாதேவன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியத்தில் கீச்சலம் கிராமத்தில் அங்கன்வாடி மைய கட்டிட பணிக்கு மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார் உடன் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.ரவீந்திர, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்




12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் உலக பொருளாதார உச்சி மாநாடு அமெரிக்காவின் வாஷிங்டன் அருகே நடந்தது. மாநாடு தொடர்பான அறிக்கை வெளியிடும் நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில் மாநாடு ஒருங்கிணைப்பாளர் ராஜாராம் சீனிவாசன், உலகப் பொருளாதார நிறுவனம் மற்றும் சென்னை வளர்ச்சி கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத், வி.ஐ.டி. வேந்தர் கோ.விசுவநாதன், தி.மு.க. செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், ஐ.எப்.எஸ். ஓய்வு அதிகாரி மகாலிங்கம், ஜெம் கிரானைட்ஸ் தலைவர் வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.

